ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,516 — 1965 සැප්තැම්බර් 29 වැනි බදාදා — 1965.9.29
14,516 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 401. உப உணவுப் பொருட்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி பின்னாதுவகே ஆதர் சில்வா ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் தேதி வெளியான 14,295 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் தேதியைக்கொண்ட சி. 397 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும் மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையை யாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞை யிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறுதொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப்பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞை யிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ந் திகதியன்று கொழும்பில் பிற்பகல் 4.30 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

பி. ஆ. சில்வா,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

## அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்குமதி விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இறாத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெண்காயம் (சிக்பெலாபூர் சிறு வெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) .. .. | 23 0 | 24 0 | 0 28 |
| கொத்தமல்லி .. .. .. | 45 60 | 47 0 | 0 48 |
| முழு உழுந்து .. .. .. | 44 0 | 45 25 | 0 46 |
| பச்சைப்பயறு .. .. .. | 39 50 | 40 75 | 0 41 |
| துவரம்பருப்பு .. .. .. | 47 75 | 49 0 | 0 50 |
| கடலைப்பருப்பு .. .. .. | 46 25 | 47 50 | 0 48 |
| புளி .. .. .. | 42 0 | 44 0 | 0 50 |
| உருளைக்கிழங்கு .. .. .. | 24 0 | 25 0 | 0 27 |
| சிறுவெண்காயம் .. .. .. | — | 24 0 | 0 28 |

**குறிப்பு.**—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

10–217

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.